**பாலிந்தநுவர பிரதேச சபை 2022**

----------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பாலிந்தநுவர பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பாலிந்தநுவர பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பீட்டின் பிரகாரம் நட்டம் ரூபா 3,929,369 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒதுக்கக் கணக்கின் மீதியை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மோட்டார் வாகன மீள்மதிப்பீட்டுக் கணக்கில் செலவு வைக்கவேண்டிய திரண்ட பெறுமானத் தேய்வு ஒதுக்கம் ரூபா 3,655,619 ஆக இருந்த போதிலும் நாட்குறிப்பு இலக்கம் 41 இன் மூலம் ரூபா 1,918,231 திரண்ட நிதிய கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | மீள்மதிப்பீடு சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்காக கிடைத்த மூலதன மானியம் ரூபா 7,662,087 ஆக இருந்த போதிலும் விரிவான வருமானக் கூற்றில் அது ரூபா 143,929,356 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரியாக மூலதன மானியத்தில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரியான பெறுமதி காண்பிக்கப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,738,191 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 49,111,572 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 2,565,000 | 2,336,530 | 2,131,424 | 725,118 | 3,158,000 | 2,637,103 | 3,020,790 | 657,127 |
| (ii) | வாடகை | 7,060,000 | 4,681,882 | 4,681,882 | 957,759 | 7,627,000 | 5,605,712 | 6,788,276 | 1,354,246 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணம் | 425,000 | 212,000 | 212,000 | 111,000 | 1,811,000 | 302,200 | 1,222,951 | 113,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 428,000 | 498,100 | 412,100 | 128,812 | 93,254,000 | - | 56,845,027 | 17,960,695 |
| | மொத்தம் | 10,478,000 | 7,728,512 | 7,437,406 | 1,922,689 | 105,850,000 | 8,545,015 | 67,877,044 | 20,085,068 |

**2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வியாபார அனுமதிப் பத்திரக் கட்டண நிலுவை ரூபா 113,000 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 111,000 அதாவது 98 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். 2023 ஏப்ரல் வரையிலும் அதில் ரூபா 3,000 அறவிடப்பட்டுள்ளது. மிகுதி ரூபா 108,000 எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானங்கள் விரைவாக அறவிபடப்படல் வேண்டும். |
| (ஆ) | மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,000,000 ஆகவும், முத்திரைக் கட்டணம் ரூபா 6,000,000 ஆகவும் காணப்பட்டது. | 2022 ஆம் ஆண்டுக்குரிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டண பட்டோலைகள் தற்போது தயாரிக்கப்படுகின்றது. | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களை விரைவாக பெற்றுக் கொள்ளல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாக்கெலிஎல்ல பார்வையிடல் நிலையத்திற்குரிய வாடகை உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 21 இன் பிரகாரம் வாடகையாளரால் வாடகைக் கால எல்லையில் தொடராக 03 மாத காலத்தில் பணம் உரிய குறித்துரைத்த திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தாதவிடத்து உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் யூலை முதல் திசெம்பர் வரை 06 மாதங்கள் நிலுவை வாடகைப் பணம் காணப்படும் போது உடன்படிக்கையை முடிவுறுத்தி வேறொரு தரப்பிப்பினருக்கு சொத்துக்களை வாடகைக்கு வழங்குவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். சட்ட ரீதியாக பணத்தை அறவிடுவதற்காக 2023.05.23 இல் பதுரெலிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது. | வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டு முதல் கிடைக்க வேண்டிய ரூபா 1,442,239 அங்கீகாரமின்றி கிடைக்கவேண்டிய கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் 2023 மே வரையும் அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | கொரோனா நிலைமையின் காரணமாக நாடு மூடப்பட்ட காலத்திற்குரிய கிடைக்கவேண்டியதாக இருந்த இந்த வருமானத்தை பதிவழிப்பதற்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. 2023.05.17 இல் மீள்நினைவூட்டலும் அனுப்பப்பட்டுள்ளது. | முன்அங்கீகாரம் பெறப்படாமல் வருமானத்தை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2006 ஏப்ரல் 15 ஆம் திகதி பாலிந்தநுவர பிரதேச சபையை ஸ்தாபிக்கும் போது உரித்தாகக் காணப்பட்ட 04 காணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் | 2006.04.15 இல் சபை ஸ்தாபிக்கும் போது உரித்தாகக் காணப்பட்ட 04 காணிகள் இனங்காண முடியாதிருந்ததை ஏற்றுக்கொள்கின்றோம். | சபைக்குச் சொந்தமான காணிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணப்பட்டிருக்க வில்லை. | இந்தக் காணிகள் தொடர்பான விபரங்களை வழங்குமாறு பாலிந்தநுவர பிரதேச செயலாளரிடம் 2023.02.27 இல் கோரப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | 1946 இன் 57 ஆம் இலக்க பொது மயான நிலங்கள் மற்றும் தனியார் மயான நிலங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் மயான நிலங்களின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு வேலி எல்லை அமைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான எந்தவொரு மயான நிலத்திற்கும் வேலி எல்லைகள் அமைக்கப் பட்டிருக்கவில்லை. | மயான நிலங்களை அளவிட்டு கையேற்றதன் பின்னர் சபைக்குச் சொந்தமான நிலமாக அறிவித்தல் பதாதையில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பாலிந்தநுவர பிரதேச சபை நிர்வாகத்தின் கீழ் உள்ள 30 மயான நிலங்களின் உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். பிரதேச செயலாளருக்கு சொந்தமான காணிகளாக இருந்தமையால் பரிந்துரையினைப் பெற்று அளவிடல்களை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | மயான நிலங்களின் உரித்து சபையினால் விரைவாக கையேற்கப்படல் வேண்டும். |

**3.4 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெல்கம்கொட வீதி அபிவிருத்தி செய்தல் ஒப்பந்தத்தில் அளவிடல் பத்திரத்தின் விடய இலக்கம் 2,2.1, 2.2, 2.3, 2.4 இன் கீழ் வீதியின் இரு பக்கமும் நிருமாணிக்கப்பட்ட கொங்கிறீட் நிரலில் அகலம் 05 அங்குலம் மற்றும் தடிப்பம் 12 அங்குலமாக இருக்க வேண்டிய போதிலும் அதன் அளவு அங்குலம் 5x4.5 அளவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் வீதியின் அடித்தளத்தை மீண்டும் அமைத்து உரிய பிரகாரம் ஓரங்களை நிர்மாணிப்பதற்காக செலுத்துவதில்லை என சபை | கொங்கிறீட் நிரலில் தேவையான அளவில் காணப்படாத போதிலும் 2022.12.31 ஆந் திகதியில் பட்டியல்கள் அனுப்புவதற்குத் தேவையாக இருந்தமையால் நிறைவேற்றப்பட்ட வேலைக்காக கொடுப்பனவு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. சீமெந்து பற்றாக்குறையினால் மீண்டும் கொங்கிறீட்டை இடுவதற்கு முடியாதிருந்தது. அடிப்பாகத்திற்காக PRDA நிறுவனத்தின் அறிக்கையின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | வீதியின் அடிப்பாகத்தை குறித்துரைத்த நியமத்தின் பிரகாரம் அமைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிப்படுத்தி இருக்கும் போது 2022 ஒக்டோர் 14 ஆந் திகதி அதற்காக ரூபா 30,254 செலுத்தப்பட்டடிருந்தது. | குறைபாடுகளினால் நிறுத்திவைத்தல் பணம் இதுவரை விடுவிக்கப்படவில்லை. | |
| (ஆ) | கொங்கிறீட் சிறுகற்கள் இட்டு அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய 03 வீதிகள் குறித்துரைத்த நியமத்தில் காணப்படாதிருந்ததுடன் சங்கத்தினால் உடன்படிக்கையின் பிரகாரம் நிறைவேற்றப்படாத வேலைப் பகுதிகளின் பெறுமதி ரூபா 91,856 கூட்டுமொத்தமாக இருந்தது. | வீதி அபிவிருத்தி அமைச்சினால் மொத்த நாட்டிற்கும் ஒரே வகையான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. சபையின் வீதிகளுக்குரிய நீளம், அகலம் வழங்கப்பட்ட பின்னர் நாளதுவரையாக்கப்படுகின்றது. சபைக்குத் தேவையான பிரகாரம் மாற்ற முடியாது. வீதிகளின் ஓரங்கள் 12 அங்குல உயரத்தில் கொங்கிறீட் இடக்கூடிய சகல இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வீதிகளின் இரு பக்கமும் உள்ள கல்லின் காரணமாக உயர அளவு மாறுபடுகின்றது. உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக உரிய சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கை மற்றும் மதிப்பீட்டின் பிரகாரம் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி இருந்ததுடன் கொடுப்பனவு செய்யும் போது சரியாக அளவிடல் வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வேலைக்கள தொழிலாளர் மற்றும் சுகாதாரத் தொழிலாளர் பதவிகளில் 03 வெற்றிடங்கள் மாத்திரம் காணப்பட்ட போதிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குப் புறம்பாக மற்றும் மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரமின்றி முன்னாள் இருந்த செயலாளரால் 32 தொழிலாளர்கள் 2019 ஆம் ஆண்டு முதல் சேர்க்கப்பட்டிருந்தனர். | இந்த தொழிலாளர்கள் சபையின் தேவை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்றனர். | முன் அங்கீகாரமின்றி தொழிலாளர்களை ஆட்சேர்ப்பதற்கு முடியாதிருந்ததுடன் அது தொடர்பான பரீட்சிப்பொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். |